Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39 | திங்கட்கிழமை | வைகாசி 28 ஆம் நாள்
கதிர் : 197 | 10 ஜூன் 2024 | வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"உப்பிடி ஆயிரத்தெட்டு பொய்ச்சத்தியங்களை நாங்கள் பாத்திட்டம் கண்டியளோ"



# '13' நிச்சயம்

## சஜித் சத்தியம்

கொழும்பு, ஜூன் 10

13 ஆவது திருத்தச் சட்டத்தை நான் முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் – இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

11

## ரணிலுடன் 'டீல்' இல்லை

கொழும்பு, ஜூன் 10
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமது அணிக்கும் இடையில் எவ்வித 'டீலும்' கிடையாது என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. ரணிலுக்கும் தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையில் அரசியல்

11





## முடிசூடினார் மோடி

புதுடில்லி, ஜூன் 10
இந்தியாவில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 292 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்த நிலையில்,

11

## நானே களமிறங்குவேன்!

### மொட்டுக்கு ரணில் தகவல்

கொழும்பு, ஜூன் 10
ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கவுள்ளதை பொதுஜன பெரமுனக் கட்சிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரியப்படுத்தியுள்ளார் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. தேசிய பொதுவேட்பாளராகவே போட்டியிட எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என அறியமுடிகின்றது. மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்களுடன் நடைபெற்ற உள்ளக சந்திப்பு

11

## ரணிலின் பதவியை நீடிக்க திரைமறைவில் முயற்சி!

### அமைச்சர்களும் ஆதரவு

கொழும்பு, ஜூன் 10
சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரு வருடங்களுக்கு நீடிப்பதற்கு, ஆளும் கட்சி அமைச்சர்கள் திரைமறைவு நடவடிக்கைகளில் தீவிரம்காட்டி வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

11

## 70 சிப்பாய்கள் மாயம்!

கொழும்பு, ஜூன் 10
ரஷ்ய – உக்ரைன் போரில் ஈடுபட கூலிப்படையில் இணைந்துகொண்ட இலங்கையின் முன்னாள் படையினர் 70 பேர் தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை என, அவர்களைத் தேடும் நடவடிக்கைகளுக்காக

11



### பருத்தித்துறை – மந்திகை

## மருத்துவமனைக்குள் புகுந்து தாக்கிவிட்டு தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தாதியர் மீதும் காவலாளி மீதும் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு, தாக்குதலாளிகள் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

11

## பட்டத்துக்குப் பாடை!

கொழும்பு, ஜூன் 10
பல்கலைக்கழக பட்டத்தை பாடையில் கட்டி வேலையில்லாப் பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.
வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்னால்

11



### கன்னாதிட்டி காளிகோயிலில்

## தாலிக்கொடி அறுத்த பெண் ஒரு மணி நேரத்தில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10
கன்னாதிட்டி காளிகோயில் கோபுர குடமுழுக்கில் பங்கேற்றவர்களின் தாலிக்கொடி உள்ளிட்ட பல்வேறு நகைகளைத் திருடிய சந்தேகத்தில் 27 வயதான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆலய குடமுழுக்கு நேற்று இடம்பெற்றது. இதன்போது அடியவர்களின் தாலிக்கொடி, சங்கிலி, பென்ரன்

11

## முடிந்தது தடைக்காலம்; இனிமேல் துயர்க்காலம்!

*யாழ். கடற்றொழில் கிராமிய அமைப்புகளின் தலைவர் ஆதங்கம்*

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிறுமி மீது தாக்குதல்; ஜனாதிபதி கண்டனம்

கொழும்பு, ஜூன் 10

முல்லைத்தீவு, புல்மோட்டைப் பிரதேசத்தில் 4 வயது சிறுமியொருவர் கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட குழந்தையின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

இதுபோன்ற துஷ்பிரயோகம் குழந்தைகளுக்கு நிகழாத வண்ணம் நீதித்துறை செயன்முறையின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றைய சிறுவர்கள் இல்லாமல் நாளை இல்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## குழாய்வழி குடிநீரை வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 10

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமங்களுக்கு குழாய்வழி குடிதண்ணீர் விநியோகத்தை வழங்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கிராமங்களின் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பெருமளவில் உவராகவும் மாற்றமடைந்துள்ளது. கிணற்றுநீர் உவராகும் நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால் அந்தக்கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளது. வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான் ஐயனார்புரம் ஆகிய இரண்டு பாடசாலை மாணவர்களும் குடிதண்ணீர்ப் பிரச்சினையால் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குழாய் வழியிலான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்படி கிராமங்களுக்கும் வழங்குவதற்கு உரிய நடவடிக்கையில் அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் எனப் பொது மக்கள் கோரியுள்ளனர். (ப-113)



## முதியோர் இல்லம் திறந்து வைப்பு

மன்னார், ஜூன் 10

முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் 3.5 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில், மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலை பெருமாள் கட்டு கிராமத்தில் அமைக்கப்பட்ட முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் டெ. க .அரவிந்தராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன் பங்கேற்றார். (ஒ-25-213)

## பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் மாதர் சங்கத்தினர் சந்திப்பு

கிளிநொச்சி, ஜூன் 10

முக்கொம்பனில் பொலிஸ் காவல் பிரிவு அமைப்பது தொடர்பாக, காங்கேசன்துறையில் உள்ள வட மாகாணத்துக்கான பிரதி பொலிஸ்மா அதிபரை, முக்கொம்பன் மாதர்சங்கத்தினர் கடந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

முக்கொம்பன் கிராமத்தில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக பூநகரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் அவர்கள் நீண்ட நேரம் கழித்து வருகை தருகின்றனர். இங்கு நடைபெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் அவர்கள் அக்கறை செலுத்துவதில்லை. இதனால் முக்கொம்பனில் பொலிஸ் காவல் பிரிவு வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக, இரணைமடுவிலுள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்குக் கடிதங்கள் கையளிக்கப்பட்ட போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று முக்கொம்பன் மாதர்சங்கத்தினர் தெரிவித்தனர். இந்நிலையில் வட மாகாணப் பிரதி பொலிஸ்மா அதிபரிடம் இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கோரினர். (ப-13)

குற்றங்களைத் தடுக்க

## சீ.சீ.ரீ.வி.களினூடாக பொலிஸார் வலைவீச்சு

கொழும்பு, ஜூன் 10

குற்றச்செயல்களையும் விபத்துகளையும் தடுக்கும் நோக்குடன் வர்த்தக நிலையங்களிலும் வீடுகளிலும் கண்காணிப்பு கமராகளைப் பொருத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. உரிமையாளர்களின் அனுமதியுடனேயே இந்த கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. இந்த கமராக்கள் வீதி யைப் பார்த்தவாறு பொருத்தப்பட்டிருக்கும். இதனை பொலிஸ் நிலையத்திலிருந்தவாறு பொலிஸார் கண்காணித்துக்கொண்டிருப்பர். இதன் மூலம் விபத்துகளையும் குற்றச்செயல்களையும் கட்டுப்படுத்தலாம்.

கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கமராக்கள் மூலம் 82 ஆயிரத்து 438 போக்குவரத்து விதிமீறல்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதன் மூலம் 38 ஆயிரத்து 75 போக்குவரத்து விதிமீறல்களுக்கு எதிராக சட்டநடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்துள்ளார். (ச-6)

## காணிகளை துப்புரவு செய்க



முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு மாவட்டத்தில், துப்புரவு செய்யப்படாமல் பற்றைகள் வளர்ந்து காணப்படும் மக்கள் குடியிருப்புக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கான நடவடிக்கைகளை, பிரதேச செயலகம் எடுக்கவேண்டும் எனப் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் அரச காணிகளைத் துப்புரவு செய்து, காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு, பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ப-13)



## சிவகுமாரனின் நினைவேந்தல் பல்கலையிலும் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக மாணவப் போராளியாகப் போராடித் தன்னுயிர் நீத்த முதல் தற்கொடையாளன் தியாகி பொன். சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, யாழ். பல்கலைக்கழகப் பொது நினைவுத் தூபியடியில் கடந்த புதன் கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)




கிளிநொச்சி, ஜூன் 10

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, வட மாகாண மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கை நிதியமும் இணைந்து, வீதியால் செல்லும் வாகனங்களின் புகைகளின் தரங்களை கடந்த புதன் கிழமை பரிசோதித்தனர்.

தொடர்ந்து, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், 'சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில், கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது. (ப-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத் துரோகிகள் சம்பந்தன், சுமந்திரன்



## இப்படிக் கூறுகின்றது பெரமுன

**கொழும்பு, ஜூன் 10**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களான இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் தமிழினத்துக்குத் துரோகம் செய்தவர்களே.**

**-இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப் பல தடவைகள் முன்வந்தபோதும் சம்பந்தனும், சுமந்திரனுமே அதனைக் குழப்பியடித்தார்கள்.

அவர்கள் சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுபவர்கள். வெளிநாடுகளிடம் நிதியைப் பெற்றுக்கொண்டு தமிழினத்துக்குத் துரோகம் செய்துள்ளார்கள்.

அவர்கள் இருவருக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு- கிழக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நாம் தீர்வுவழங்குவோம் - என்றார். (ச-இ)

# தேர்தல் ஒத்திவைப்பை பெரமுனக் கட்சி ஏற்காது

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

தேர்தல்களைப்பிற்போட நாம் அனுமதிக்கமாட்டோம். குறிப்பாக பிரதான தேர்தல்களை உரியகாலத்தில் நடத்தியே தீர வேண்டும், எமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை.

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேர்தல்களைப்பிற்போடும் ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு வழங்குமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். எந்தத் தேர்தலுக்கும் ராஜபக்சக்கள் பயப்படுபவர்கள் அல்லர். நான் ஜனாதிபதியாக இருந்தவேளை தேர்தல்களை உரியகாலத்தில் நடத்தினேன்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் உரியகாலத்தில் தேர்தல்களை நடத்தவேண்டும். அவர் தவறு இழைக்கமாட்டார் என்று நம்புகின்றேன். மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விரைவில் வெளிப்படுவார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# இலங்கை கிரிக்கெட் வியாபாரம் அல்ல!

## அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலத்தை முன்னெப்போதையும்விட வலுவாகவும், வெற்றிகரமானதாகவும் மாற்றுவதற்கு சீர்திருத்தங்களை நிறைவேற்றவேண்டும்.

-இவ்வாறு அமைச்சரும், ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் நிலையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் தலைவருமான அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த ஆண்டுக்கான ரி-20 உலகக் கிண்ணமானது அமெரிக்காவில் ஆரம்பமாகி தற்சமயம் நடைபெற்று வருகிறது. இதில் இரண்டு போட்டிகளை மாத்திரம் எதிர்கொண்ட இலங்கை அணி, அந்த இரு போட்டிகளிலும் படுதோல்வியைத் தழுவியுள்ளது. கிரிக்கெட் என்பது இலங்கையின் இதயத்துடிப்பாகும், ஆனால் இன்று எமது நேசத்துக்குரிய விளையாட்டு நெருக்கடியில் உள்ளது. இந்தச் சிக்கல்களைத் தற்காலிக திருத்தங்களால் தீர்க்கமுடியாது. கிரிக்கெட்டை தனிப்பட்ட நிறுவனமாக மாற்றியவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கும் துணிச்சலான, தொழில்முறை அணுகுமுறை எமக்குத் தேவை. இலங்கை கிரிக்கெட்டுக்கான புதிய விளையாட்டுச் சட்டம் மற்றும் அரசமைப்புடன் சீர்திருத்தங்களை நிறைவேற்றவேண்டும் - என்றார். (ச-இ)

# 7 நாள்களில் 700 தொற்றாளர்கள்

கொழும்பு, ஜூன் 10

கடந்த ஏழு நாள்களில் 700 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மழையுடனான வானிலை மற்றும் வெள்ள நீர் தேக்கம் என்பன டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு வழிவகுத்துள்ளன.

இந்த ஆண்டில் இதுவரையில் 9 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டில் இதுவரையில் 25 ஆயிரத்து 619 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ஊழலற்ற அரச நிர்வாகத்தை ஏற்படுத்துமாம் மொட்டுக் கட்சி!



## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

ஊழல் அற்ற அரச நிர்வாகத்தை எம்மால் உருவாக்க முடியும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொவிட் பெருந்தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும்போது பொருளாதாரரீதியில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதை நன்கு அறிவோம். கொவிட் பெருந்தொற்று தாக்கத்துடன் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பை ஒரு தரப்பினர் தமது அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அரசியல் சூழ்ச்சியால்தான் எமது அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தை மாத்திரம் கொண்டு, பொருளாதாரரீதியான தீர்மானங்களை எடுக்கமுடியாது. நாட்டுக்கு எதிரான எந்தவித தீர்மானங்களையும் நாங்கள் எடுக்கப் போவதில்லை. நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை நாங்கள் ஏற்போம் - என்றார். (ச-இ)

# புதினம் தெரியுமோ?

மெத்தப்படிச்ச மேதாவியள் இருக்கிற இடம்தான் கம்பஸ் எண்டு எல்லாரும் நினைக்கிறம். ஆனால் அங்க நடக்கிறதுகளைப் பார்த்தால், அதுக்கு நேர்மாறாத்தான் இருக்குது. கம்பஸில இப்ப கல்விசாரா ஊழியர்களின்ர போராட்டம் நடக்கிறதால எக்ஸாம் எல்லாம் பின்னுக்குப் போடுப்பட்டிருக்கு. எண்டாலும் இருக்கிற நேரத்தை ஏன் வீணாக்குவான் எண்டிட்டு, யாழ்ப்பாணக் கம்பஸ் பிள்ளையள் இந்த இடைப்பட்ட காலத்தில எக்ஸாமுக்கு படிக்கிறதுக்காக கம்பஸுக்குப்போய் வந்து கொண்டுதான் இருக்கினம். விஞ்ஞானபீடத்தில உள்ள 'ஸ்ரடி ஹோல்' (கற்றல் மண்டபம்) முழுக்க எக்ஸாமுக்கு படிக்கிற பிள்ளையளால நிரம்பியிருக்கும். கிட்டடியில காலமை 10 மணி போல, பிள்ளையள் படிச்சுக் கொண்டிருக்க, அவையை உள்ளுக்க விட்டிட்டு ஒரு லெக்சரர் விறுவிறுவெண்டுவந்து, ஸ்ரடி ஹோலின்ர கதவைப் பூட்டிப் போட்டார். அவர் ஏன் பூட்டினார் எதுக்குப் பூட்டினார் எண்ட கோதாரியெல்லாம் இதுவரைக்கும் ஆருக்கும் தெரியாது. அந்த ஹோலுக்கு நேரதான் 'தண்ணி ராங்க்' இருக்கு. அதுக்கு தண்ணி விடுறதுக்குப்போன பீடாதிபதியும், இப்பிடி பிள்ளையளை ஹோலுக்குள்ள வைச்சு லெக்சரர் பூட்டிறதைப் பார்த்திருக்கிறார். ஆனால் ஒண்டும் சொல்லேலை.

ஹோலுக்குள்ள மாட்டுப்பட்ட பிள்ளையள், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவருக்குப் போன் பண்ணியிருக்கினம். உடன அங்க வந்த மாணவர் ஒன்றியத் தலைவர், அந்த லெக்சரரிட்ட 'ஏன் சேர் பூட்டினீங்கள்?' எண்டு கேக்க, அந்தாள் கல்லுளிமங்கன்போல பேசாமல் நிண்டிருக்கிறார். அதோட பூட்டைத் திறக்கவுமில்லை. 'என்னெண்டு பிள்ளையள் வெளியில வருவாங்கள்? உள்ளுக்க பைக்குகளும் நிக்குது' எண்டு கேக்க, 'அப்பிடி அவசரமெண்டால் அவை மேலால பாய்ஞ்சு வரட்டும்' எண்டு அந்த லெக்சரர் விதண்டாவாதம் செய்திருக்கிறார். உடன மாணவர் ஒன்றியத் தலைவர் ஸ்ரடி கோல் கதவுக்குப் போட்ட பூட்டை பிடிக்க, அது கையோட வந்திட்டுது. லெக்சரர் மாதிரி அதுவும் 'கழண்டு' போய்க் கிடந்திருக்குப்போல. இதையும் பீடாதிபதி பார்த்துக்கொண்டுதான் இருந்திருக்கிறார். ஆனால் பிள்ளையள் படிச்சுக் கொண்டிருக்கேக்க, அவையை பைக்குகளோட சேர்த்து உள்ளுக்க விட்டு கதவைப் பூட்டின லெக்சரரை விட்டிட்டு, ஹோலுக்குள்ள மாட்டுப்பட்ட பிள்ளையளை மீட்கப்போன மாணவர் ஒன்றியத் தலைவருக்கு 'பூட்டை உடைச்சார்' எண்டு சொல்லி வகுப்புத்தடை போட்டிருக்கினமாம். இது எந்த மாதிரி நீதி எண்டு ஆருக்கும் விளங்கேலை.

உண்மையில வகுப்புகளை பூட்டுறதோ, தண்ணி ராங்குக்கு தண்ணி விடுறதோ லெக்சரர், பீடாதிபதிமாரின்ர வேலை இல்லை. அது கல்விசாரா ஊழியர்களின்ர வேலை. அவை இப்ப பணிப்புறக்கணிப்பு எண்டதால, அந்தப் போராட்டத்துக்கு எதிரா தாங்களே அந்த வேலையளை சில பீடங்களின்ர லெக்சரர்மார் செய்யினம். அப்பதான் கம்பஸ் ஒழுங்கா இயங்குதெண்டு காட்டி, இந்தப் பணிபுறக்கணிப்பை பிசுபிசுக்கச் செய்யலாமாம். அப்பிடி கண்ணை மூடிக் கொண்டு, சொன்னதை மட்டும் செய்யிற சுப்பனாப்போன லெக்சரர்தான், ஹோலுக்குள்ள பிள்ளையள் படிச்சுக் கொண்டிருந்தாலும் பரவாயில்லை, ஹோலைப் பூட்டினால் சரி எண்ட எண்ணத்தோட நடந்திருக்கிறார். அப்பிடி பிள்ளையளை அடைச்சு வைக்க நினைச்ச, தேவையில்லாத பிரச்சினையை உண்டாக்கின அந்த லெக்சரருக்கு எதிரா கம்பஸ் ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கேலை. அந்த லெக்சரர் செய்தது பிழைதான் எண்டு, அதை நேர கண்ட சாட்சியான பீடாதிபதியும் சொல்லுறார். ஆனாலும் நிர்வாக ரீதியாக அவருக்கு ஒரு விசாரணைகூடவைக்காமல், பிள்ளையளின்ர பிரச்சினையைத் தீர்க்கப்போனதுக்காக மாணவர் ஒன்றியத் தலைவருக்கு மட்டும் தண்டனை குடுக்கிறதெண்டது, உலகத்திலயே நடக்காத விசித்திரமான நீதிதான்.

ஆனாலும் இப்பிடி ஓரவஞ்சனையா நடந்ததுக்குப் பின்னாலையும் சில சங்கதியள் இருக்குது. அதை நாளைக்குப் பாப்பம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தகவல் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக் கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி நற்சிந்தனைகளும் அதிகரிக்கும். காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உணவு விடயத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை இருக்கும். திருமால் வழிபாடு நலம் சேர்க்கும்.

**சிம்மம்:** காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். கூடுதல் நன்மைகள் ஏற்படும். சிறு சச்சரவு ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகளால் கையிருப்பு கரையும். இலாபமும் அதிகரிக்கும். மகாலட்சுமி வழிபாடு மகிழ்ச்சி தரும். சிரமம் எதுவும் இருக்காது.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கலகலப்பான சூழ்நிலை காணப்படும். காரியம் அனுகூலமாக முடியும். வீண்விவாதம் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதில் சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும். மகிழ்ச்சி உண்டாகும். முருகப்பெருமான் வழிபாடு நன்று.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். மனதுக்கு உற்சாகம் தரும். வீண் மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

# தென்னாபிரிக்காவுக்கு நெருக்கடிகொடுத்த நெதர்லாந்து



நெதர்லாந்து அணியுடனான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றது.

ரி - 20 உலகக் கிண்ணத் தொடரின் 16ஆவது ஆட்டம் நியூயோர்க்கில் இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. நெதர்லாந்து அணி 9 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப்பெற்றது. சைபிராண்ட் 45 பந்துகளில் 40 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் பாட்மன் 11 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலளித்து ஆடிய தென்னாபிரிக்க அணி 12 ஓட்டங்களுக்குள் 4 இலக்குகளை இழந்தது. டேவிட் மில்லர் 51 பந்துகளில் 59 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொடுத்து 18.5 பந்துப் பரிமாற்றங்களில் அணியின் வெற்றியை உறுதிசெய்தார். பந்துவீச்சில் விவியன் கிங்மா மற்றும் வான் பீக் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக டேவிட் மில்லர் தெரிவானார். (ஒ-5)



# இங்கிலாந்தை வீழ்த்தியது அவுஸ்திரேலியா

இங்கிலாந்து அணியை 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது அவுஸ்திரேலிய அணி.

ரி - 20 உலகக் கிண்ணத் தொடரின் 17ஆவது ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 7 இலக்குகளை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய அணியின் முன்வரிசை மற்றும் மத்திய வரிசை வீரர்கள் சராசரியாக 30 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுக்க இந்த இலக்கை எட்டியது. பந்துவீச்சில் ஜோர்டன் 44 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்து ஆடிய இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடினாலும் இறுதியில் சொதப்பியது. 10 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைக் குவித்திருந்தது. பின்னர் சம்பாவின் சுழலில் சிக்கத் தொடங்கியது. 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அந்த அணி சார்பில் பட்லர் மாத்திரம் 28 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் சம்பா, குமின்ஸ் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சம்பா தெரிவானார். (ஒ-5)



# மேற்கிந்திய தீவுகளுக்கு மிகப்பெரிய வெற்றி

உகண்டா அணியை 134 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்தது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

கயானா ப்ரொவிடன்ஸ் விளையாட்டரங்கில் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்ற 'சி' குழுவுக்கான ஆட்டத்தில் உகண்டா மற்றும் மேற்கிந்தியத்தீவு அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த மேற்கிந்தியத் தீவுகள் 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

ஜோன்ஸ்டன் சார்ள்ஸ் 44 ஓட்டங்களையும், ரசல் 17 பந்துகளில் 30 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ப்றயன் மசாபா 31 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உகண்டா அணி 12 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 39 ஓட்டங்களுக்கு சுருண்டது. துடுப்பாட்டத்தில் ஜுமா மியாகி மாத்திரமே 13 ஓட்டங்களை அதாவது இரட்டை இலக்க எண்ணிக்கையைப் பெற்றார்.

பந்துவீச்சில் அக்கீல் ஹொசெய்ன் 4 பந்துப் பரிமாற்றங்களில் 11 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை வீழ்த்தினார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ஒ-5)

# மணவாளக்கோலமும் சதுர்த்தி உற்சவமும்

மட்டுவில் வடக்கு அருள்மிகு பனையடிப் பிள்ளையார் ஆலயத்தின் மணவாளக்கோல உற்சவமும் சதுர்த்தி வழிபாடும் இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளன. உற்சவத்தில் பிள்ளையாருக்கு 1008 சங்காபிஷேகமும் வைரப்பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் ஆலய பிரதம குருக்கள் தேவபிரசன்னாக குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. அபிஷேகத்தைத் தொடர்ந்து பிள்ளையார் வீதிவலம் வருவார் என ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார். (ச-131)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இக்கட்டில் ரணில்..!

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான சகல வழிகளும் தற்போதைய நிலையில் அடைபட்டுள்ளன. அரசமைப்புக்கு அமைவாக தேர்தலை நடத்தியாக வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அடுத்த தேர்தலில், தான் களமிறங்குவாரா? இல்லையா? என்பதை வெளிப்படுத்தாமல் ஒளித்துப்பிடித்து விளையாடி வருகின்றார் ரணில். ஆனால், அவருக்கு ஆட்சியைக் கொடுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே ரணிலின் இந்த ஆட்டத்தை தொடர்வதற்கு அனுமதிக்காது என்பதை தெட்டத் தெளிவாகவே சொல்லிவிட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், ஜனாதிபதித் தேர்தலில் தனக்கான வெற்றிவாய்ப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்பதற்காக கடுமையாக முயற்சிக்கின்றார். சர்வதேசநாணய நிதியத்துடனான உடன்பாடு, வெற்றிகரமான கடன்மறுசீரமைப்புச் செயற்பாடு என்பவற்றின் ஊடாக மக்கள் மனதில் இடம்பிடிக்கக் கணக்குப்போடுகின்றார். ரணிலை ஆதரிப்பவர்கள், அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகவேண்டும் என்பதற்கு சொல்லும் ஒரே காரணமும் அதுதான். 'ரணிலைவிட்டால் பொருளாதார நெருக்கடியை சீர்செய்ய ஆளில்லை. ரணில் மீண்டும் தெரிவாகாவிட்டால், சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குகள் எல்லாம் குழம்பிவிடும், கடன் மறுசீரமைப்பு நடக்காமல் போய்விடும். ரணில் மீண்டும் ஆட்சிக்கு வருவதன் மூலமே இந்த நாட்டில் மீண்டுமொரு அரகலயவோ, வரிசையுகமோ தோன்றாது' என்று சொல்லி வருகின்றனர். ஆனால், அவர்கள் எப்படிச் சொன்னாலும், சாதாரண மக்களைப்பொறுத்தவரையில் அவர்கள் இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதிலிருந்து விடுவித்த மீட்பராக ரணிலைக் கருதவேயில்லை. கடந்த வருடம் வரையில் ரணில் மிகச்சிறந்த பொருளாதார மீட்பர் என்று நம்பிய மக்கள், இப்போது அதிலிருந்து விலகத் தொடங்கியிருக்கின்றனர். அன்றாட வாழ்க்கையை கொண்டிழுக்க அவர்கள் படும்பாடு ரணிலின் மீட்பர் விம்பத்தை உடைக்கின்றது. இலங்கையில் பெரும்பாலானவர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது சேமிப்புகளும் கரையத் தொடங்கியுள்ளன. இந்தச் சூழலில் ரணிலால் தங்கள் பொருளாதாரம் மேம்படும் என்று அவர்கள் நம்பத்தயாரில்லை.

இந்த நிலையில்தான் ரணில் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பதைச் சொல்லாமல் ஒளித்துப்பிடித்து விளையாடிவருகின்றார். ஆனால், பெரமுனவோ, ரணிலுக்கு திட்டவட்டமான காலக்கெடுவை நிர்ணயித்திருக்கின்றது. தமது கட்சியின் அதாவது மொட்டுச் சின்னத்தில் களமிறங்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருக்கின்றது. ரணிலைப் பொறுத்தவரையில் பொதுச் சின்னமொன்றில் பொதுவேட்பாளராகக் களமிறங்குவதற்கு வியூகம் அமைத்துவருகின்றார். அதன் ஒரு வெளிப்பாடாகத்தான் கொழும்பில் தனக்கு, தனியான அரசியல் அலுவலகத்தை அவர் திறந்து வைத்திருக்கின்றார். தன்னை ஆதரிக்கும் அனைத்துத் தரப்புகளையும் அங்கு ஒருங்கிணைப்பதற்கே அவர் திட்டம் தீட்டுகின்றார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இதன் ஊடாக நேரடியாகவும் - மறைமுகமாகவும் சில செய்திகளை ரணில் சொல்லியிருக்கின்றார். பெரமுன எத்தகைய நகர்வுகளை எடுக்கப்போகின்றது என்பதில்தான் எந்தத் தேர்தல் அடுத்து நடக்கும் என்பது தெரியவரும். பெரமுன, ரணிலின் இந்த முடிவால் குழம்பி, நாடாளுமன்றத்தில் ரணிலுக்கான ஆதரவை மீளப்பெற்றால், நாடாளுமன்றத்தை கலைப்பதைத் தவிர ரணிலுக்கு வேறுவழியிருக்காது. ஆனால், இதையும் சகித்துக்கொண்டு ரணிலை பொது வேட்பாளராக முன்னிறுத்தி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டால் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரமுனவுக்கு இடமிருக்காது, எனவே இக்கட்டான சூழல் இப்போது பெரமுனவுக்கு. பெரமுனவின் தீர்மானத்தில்தான் இப்போது நாடு சந்திக்கப்போகும் தேர்தல் தங்கியிருக்கின்றது. இன்னமும் ஒரு வாரத்தினுள் எதுவானாலும் பகிரங்கமாகிவிடும்...!




# நீதி, பொறுப்புக்கூறலுக்காக அமெ. தொடர்ந்து செயற்படும்

## சிறப்புத் தூதுவர் பெத் வான் ஷாக் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 10**

**இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முக்கியமான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதை மையப்படுத்தி தொடர்ந்தும் பணியாற்ற எதிர்பார்க்கின்றோம் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான சிறப்புத் தூதுவர் பெத் வான் ஷாக் தெரிவித்துள்ளார்.**

வொஷிங்டனில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கை சந்தித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், அமெரிக்க சர்வதேச வளர்ச்சி நிதிக்கழகத்தின் துணைத் தலைமை நிர்வாக அதிகாரி நிஷா பிஸ்வாலை சந்தித்தும் உரையாடியுள்ளார். அதில் கொழும்புத்துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 553 மில்லியன் டொலர் நிதி உதவியை செயற்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-இ)

# ரயில் இயந்திர சாரதிகளின் போராட்டம் தொடர்கின்றது

கொழும்பு, ஜூன் 10

ரயில் இயந்திர சாரதிகள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் மூன்றாவது நாளாக தொடர்கிறது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு வழங்குவதில் தாமதம், ஆட்சேர்ப்பில் தாமதம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு கடந்த 6ஆம் திகதி தொடக்கம் இந்தத் தொழில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் பதிலளிக்கவில்லை என்றால் தொழிற்சங்க நடவடிக்கை மேலும் கடுமையாக்கப்படும் என்றும் சங்கத்தின் செயலாளர் எச்சரித்துள்ளார். (ச-இ)

# ஐ.நா.வின் சமூக சபையில் இலங்கை

கொழும்பு, ஜூன் 10

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு மீண்டும் இலங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் சபையின் உறுப்பினராக, வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாலின சமத்துவம் உள்ளிட்ட திட்டங்களுக்கு இலங்கை பங்களிக்கும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# இரு அமைச்சுகளுக்கு புதிய செயலர்கள்

கொழும்பு, ஜூன் 10

இரண்டு அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்களை நியமித்து, ஜனாதிபதி செயலாளர் ஏக்கநாயக்கவால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய புத்தசாசன, சமய மற்றும்கலாசார அமைச்சின் செயலாளராக பி. ஹேரத், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளராக சோமரத்ன விதான பத்திரண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# டில்லியில் ரணில்

கொழும்பு, ஜூன் 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று புதுடில்லிக்குப் பயணமனார். நேற்று நடைபெற்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே அவர் புதுடில்லிக்குச் சென்றிருந்தார். (எ-இ)

## நாளை

11.06.2024

**செவ்வாய்க்கிழமை**

**வைகாசி - 29**

சுபநேரம் : 10.22 -11.52

ராகுகாலம் : 02.52 - 04.22

## நாளொரு நல்வார்த்தை

**நிரந்தரமாக வைத்து, மகிழ எதுவுமில்லை.
இருப்பதையெல்லாம் ஒருநாள்
இழந்தே தீரவேண்டும்.**

**- கலீல் ஜிப்ரான் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 மாத காலப்பகுதியில் 9,000 கோடி வருமானம்

## அம்பலப்படுத்தினார் சம்பிக்க

**கொழும்பு, ஜுன் 10**

**இலங்கை மின்சாரசபை கடந்த 5 மாதகாலப் பகுதியில் மட்டும் 9 ஆயிரம் கோடி ரூபா மேலதிக வருமானத்தைப் பெற்றிருக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் மின் பாவனையாளர்களிடமிருந்து மேலதிகமாக 12 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது.**

-இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டவரைவு மீதான விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்சாரசபையை 12 கூறுகளாகப் பிரித்து, அவற்றைத் தனியாருக்கு வழங்கும் இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டவரைவு தொடர்பில் விசேடகவனம் செலுத்த வேண்டும். அரச சேவை தொடர்பில் அரசாங்கம் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பது தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

நட்டமடையும் அரச நிறுவனங் களை மறுசீரமைக்கவேண்டும் என சர்வதேச நாணயநிதியம் குறிப்பிட்டுள்ளது என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், மறுசீரமைப்பின்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய வெளிப்படைத்தன்மை, பொதுக் கோட்பாடுகள் தொடர்பில் நாணயநிதியம் முன்வைத்த பொது வான அறிவுறுத்தல்களை அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை.

மின்சாரசபையின் நட்டத்தை முகாமை செய்வதற்காக மின் கட்டணம் பலமுறை உயர்த்தப்பட்டது. அதனால் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 இலட்சம் மின் பாவனையாளர்களின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது- என்றார். (ஏ-இ)



# விழிப்புணர்வு நடைபவனி

*யாழ்ப்பாணம், ஜுன் 10*

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, நல்லூர்ப் பிரதேச செயலகத்தினரின் ஏற்பாட்டில் அலுவலக உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு நடைபவனி நல்லூர்ப் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நல்லூரில் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. நடைபவனியின் இறுதியில் பிரதேச செயலக அலுவலக உத்தியோகத்தர்களால் 'உயிருக்குள் கர்ப்பம்' எனும் தெருவெளி ஆற்றுகையும் நிகழ்த்தப்பட்டது. (ஒ-25-66)


## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 09 . 1936



மறைவு 09 . 06 . 2024

### அமரர் சிவசம்பு சிவப்பிரகாசம்

மண்கும்பான் கிழக்கு 4ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவசம்பு சிவப்பிரகாசம் (இலகுபிள்ளை) 09.06.2024 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு சின்னத்தங்கச்சியின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற இராசையா புவனேஸ்வரியின் பாசமிகு மருமகனும் தனலெட்சுமியின் ஆருயிர் கணவரும் காலஞ்சென்றவர்களான பிள்ளைமுத்து, ஆறுமுகம், செல்லத்தம்பி, கணபதிப்பிள்ளை, நாகராசா, இராசம்மா, மற்றும் தங்கம்மா, சின்னம்மா, சிவகுருநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், விக்கினேஸ்வரன், ஜெகதீஸ்வரன், இராஜேஸ்வரன், சிவனேஸ்வரன், கேதீஸ்வரன், சிவரூபி, தனரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும் யசோதா, செந்தில்செல்வி, பிறேமா, நளாயினி, அனுஷா, கஜேந்திரன், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஜன், விதுஷா, தனுஸ்கரன், வினுஷா, அபிஷன், திவானுஜா, சுவர்ணன், கிருஷிகன், பிரியங்கா, பிருஷிகா, பிரணவி, அபிநயன், பவிஷ்ணு, திவ்வியன், திபிஷா, லகீஷா, யஸ்மிகா, கபினா ஆகியோரின் பாசமிகு பேரனும் தாருஷ்சின் அன்பு பூட்டனும் மனோன்மணி, பன்னீர்செல்வம், புஷ்பராணி, பற்குணதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.06.2024 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணிக்கு சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 718) V-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 04 . 1944



மறைவு 08 . 06 . 2024

### காசிநாதன் நாகம்மா

நீர்வேலி வடக்கினை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், தற்போது கோப்பாய் வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதன் நாகம்மா அவர்கள் (08.06.2024) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பாக்கியம் அவர்களின் அன்பு மகளும் சின்னத்தம்பி - செல்லம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காசிநாதனின் பாசமிகு மனைவியும், திருஞானசம்பந்தர், சந்திரசேகரம், காலஞ்சென்ற சிவசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, தவமலர், ஜெகதீஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், பிரதீபன் (பிரான்ஸ்), குமுதினி (நோர்வே), மகிழினி (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரஞ்சினி (பிரான்ஸ்), ராஜ்குமார் (நோர்வே), மோகனராசன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதி பிரதம செயலாளர் திட்டமிடல் அலுவலகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஞ்சனா (பிரான்ஸ்), அக்ஷனா (நோர்வே), சாறுக் (நோர்வே), திவ்வியகரன் (களனிப் பல்கலைக்கழகம்), சாம்பவி (இராஜரட்டைப் பல்கலைக்கழகம்), காருண்யா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2024) செவ்வாய்க் கிழமை அன்று காலை 08.00 மணியளவில் கோப்பாயில் உள்ள அவரின் மகளின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

MPCS Lane,
கோப்பாய் வடக்கு, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 968 3969

(CS 715) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

# யா/வரணி மத்திய கல்லூரி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



செல்வி
சிவராசா வசிகா - 3A
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
மாவட்ட நிலை - 11
தேசிய நிலை — 90

2012 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் கணித விஞ்ஞானத் துறை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவி.



செல்வி
ஜீவாகரன் அதிசயா - 3A
பௌதீக விஞ்ஞானப் பிரிவு
மாவட்ட நிலை - 11



செல்வன்
இராஜரட்ணம் தசாயினன் - 3A
பௌதீக விஞ்ஞானப் பிரிவு
மாவட்ட நிலை - 30



செல்வி
விக்னேஸ்வரன் ஜானுயா - 3A
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 15



செல்வி
கோகிலன் ஆஷா - 3A
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 18



செல்வி
கதிர்காமசோதிலிங்கம் ராகவி - 3A
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 108



செல்வி
சந்திரகுமார் விதுசா - 3A
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 117

பௌதீக விஞ்ஞானப்பிரிவு
1. செல்வன் இராஜேஸ்கண்ணா துளசிதரன் A2B
2. செல்வி வேல்முருகன் ஜிந்துஷா B2C
3. செல்வன் சூரியகுமார் வேனுசன் B2C
4. செல்வி துஸ்யந்தன் அக்சனா 3S

உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
1. செல்வி. இரவீந்திரன் கோபிரம்மியா ACS
2. செல்வி. ரஜனிகாந்தன் ஜமீனா 2CS
3. செல்வன். தங்கராசா கார்த்திகன் 3S

கலைப்பிரிவு
1. செல்வி. செந்திநாதன் நிமேஷா 2AB
2. செல்வி. மித்திரன் சுபேதிகா 2AB
3. செல்வி. தயாளன் கேதியா 2AB
4. செல்வி. விநோதன் வின்சா 2AC
5. செல்வி. ஜெகநேசன் சயந்தினி A2B
6. செல்வி. சிவகுமார் டிலக்சனா ABC
7. செல்வி. வாமேஸ்வரன் வர்மிகா 2BC
8. செல்வி. சர்வானந்தன் துசிதா A2C
9. செல்வி. மகாதேவன் அபிநா ACS

2023(2024) க.பொ.த. உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற அனைத்து மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் மற்றும் வழிப்படுத்திய அதிபர் அவர்களையும் வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

கல்லூரிச்சமூகம்

(CR 42620) V-1


# பலஸ்தீனம் தனிநாடு; 146 நாடுகள் ஆதரவு

கொழும்பு, ஜூன் 10

ஐ.நா.சபையில் 146 நாடுகள் பலஸ்தீனத்தை தனிநாடாக்குவதற்கு அங்கீகரித்துள்ளன. ஐ.நா.வில் 193 நாடுகளில் 146 நாடுகள் பலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ளன. இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்துவதற்கும் காஸாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதே ஒரேவழி என இந்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-6)


## மரண அறிவித்தல்



### சபாரத்தினம் குணநாயகம்

(குணம் மாஸ்ரர்)

காரைநகர் நீலிப்பந்தனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் குணநாயகம் (குணம் மாஸ்ரர்) நேற்று (09.06.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம்-தங்கரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகனும். மூதூரைச்சேர்ந்த கனசிங்கம் - ஜெயராணி தம்பதிகளின் மருமகனும். குமாரலட்சுமியின் அன்புக் கணவரும். அஜந்தன் (திரைப்பட இயக்குநர். சக்தி ரிவி). மயூரன் (ஆசிரியர். சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம். திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும். பிரதீபாவின் பாசமிகு மாமனாரும். காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதிப்பிள்ளை. கனகசபாபதி (முன்னாள் கிராம சேவையாளர் ஜே-47). சண்முகரத்தினம் (முன்னாள் அஞ்சலதிபர். காரைநகர்). ஆறுமுகம்பிள்ளை (முன்னாள் விற்பனையாளர் ப.நோ.கூ சங்கம். காரைநகர்) மற்றும் சகுந்தலா தேவி. சறோஜினிதேவி. இராசநாயகம் (ஓய்வுநிலை பிரதம இலிகிதர். ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை). சுந்தரேஸ்வரன் (நல்லைக் குமரன் ரெக்ஸ்ரைல்) ஆகியோரது பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2024) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரது நீலிப்பந்தனை இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரிகைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 08 . 1936

மறைவு 08 . 06 . 2024

### கந்தையா தையல்நாயகி (ஆச்சியம்மா)

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், மாரியம்மன் வீதி, அம்பத்தை வளவு, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தையல்நாயகி நேற்றுமுன்தினம் (08.06.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசா மற்றும் கோபாலபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், விமலநாதன் (ராயன்), றங்கநாதன் (ஜேர்மன்), விஜியநாதன், செந்தில்நாதன் (இலண்டன்), நாகறஞ்சினி (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் றொசிலியா, காலஞ்சென்சென்ற லீலாவதி ஆகியோரின் மைத்துனியும், பிறேமலதா, விஜியசரோயா, ஷம்சாத் (லண்டன்), ஜெகநாதன் (பிரான்ஸ்), றிஷாந்தி, விஜயரூபன், முரளிநாத், கீதா ஆகியோரின் அன்பு மாமியும், சங்கவி, அபிநந்தன், ஷயான், ஜெசீவன், அஸ்வினி, சாய்ராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.06.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 730 4216
077 470 9465

தகவல்:
குடும்பத்தினர்

(cs 55331(N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வளங்களை விற்க அரசுக்கு வெட்கமில்லையா?

## கடுமையாகச் சாடிய கிரியெல்ல

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிவிட்டு, தேசிய வளங்களை விற்க அரசாங்கத்துக்கு வெட்கம் இல்லையா? என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல ஆளும் தரப்பைக் கடுமையாகச் சாடினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டவரைவு தொடர்பில் இருநாள் விவாதம் தேவை என்று எதிர்க்கட்சித் தலைவர் கூட்டத்தில் நான் வலியுறுத்தினேன். ஆனால், ஆளும்தரப்பு அதற்கு இடமளிக்கவில்லை. தேசிய வளங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்குக் கிடையாது. பெரும்பான்மை உள்ளது என்றால் ஏன் சட்டவரைவை இயற்ற அவசரப்படுகிறீர்கள். நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிவிட்டுத் தற்போது வெட்கமில்லாது அரச வளங்களை விற்கின்றனர். வெட்கமில்லாது ஏன் இன்னமும் அரசாங்கத்தில் இருக்கின்றீர்கள்? அட்டைப் பூச்சி போன்று ஒட்டிக்கொண்டிருக்காது விட்டுச்செல்லுங்கள்- என்றார். (எ-இ)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 04.09.1944 — மறைவு 12.05.2024

### நாகப்பர் மாணிக்கம்

(ஓய்வு பெற்ற நில அளவை படவரைஞர். முன்னாள் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் - ஹாட்லி கல்லூரி. மொழிபெயர்ப்பாளர்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (11.06.2024) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் பரு.கல்லூரி வீதி. தாமரைகுளத்தடி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று. 12.06.2024 புதன்கிழமை **பரு. சிவன் ஆலய பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தான மண்டத்தில்** முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

மேலும் அன்னாரது மரணச் செய்தி அறிந்து பல்வேறு வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs 55332) (N-1)

---

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.12.1942 — மறைவு 08.06.2024

### அமரர் வீரகத்தி செல்லி

எமது ஆலயத்தில் நீண்டகாலமாக பல வகையான தொண்டுகளை மிகுந்த அர்ப்பணிப்புடன் தினமும் செய்து ஆலய செயற்பாடுகளுக்கு பெரும் உறுதுணையாக செயற்பட்டு வந்த அமரர் வீரகத்தி செல்லி அவர்கள் கடந்த (08.06.2024) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!*

நம்பிக்கைப் பொறுப்பாளர்
பரிபாலன சபையினர்
கைதடி வீரகத்திப்பிள்ளையார்
கோயில் முதலாய கோயில்கள்.

(CS 55333) V-1

---

## கிருஸ்ணா அடைவு கடை

பதிவு இல.J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2023 ஆம் ஆண்டு 31.09.2023 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2024 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15 ஆம் திகதி (15.07.2024) இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.07.2024 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு:**
2023 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் 31 ஆம் (2023.09.31) திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

**இல. 370, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 490 0311**
**021 222 5180**
**077 080 4656**

**உரிமையாளர்,**
**இல.09, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(ce 55295) (N.1)

---

## மரண அறிவித்தல்



### நாகமுத்து சீவரத்தினம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சீவரத்தினம் நேற்று (09.06.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாகம்மா தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்ளான வல்லிபுரம் - தெய்வானை தம்பதியிரின் அன்பு மருமகனும், ஜெகதாசன் (பிரான்ஸ்), சிவதாசன் (அபிவிருத்தி உத்தியொகத்தர்-வவுனியா நகர சபை), Dr. குணதாசன் (R.D.H.S - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரவதனி (பிரான்ஸ்), ஜெயரூபி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் - வவுனியா), றிஷ்வி (ஆசிரியை - ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், பரமசாமி, கனகரட்ணம், தம்பிஐயா, தவமணிதேவி மற்றும் சோதிலிங்கம், தியாகராஜா ஆகி யோரின் அன்புச் சகோதரனும்,காலஞ்சென்ற இராசம்மா மற்றும் முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அஷ்வானி, அஷ்விதா, அபிசன், அபிநயா, டில்ஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி வீதி**
**இருபாலை**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 12 . 1947



மறைவு 08 . 06 . 2024

### அருணாசலம் சத்தியமூர்த்தி

மட்டுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சத்தியமூர்த்தி நேற்றுமுன்தினம் (08.06.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், சத்தியசீலன், கிருஸ்ணமூர்த்தி, சத்தியானந்தா (Doctor - லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விஜயராணி, சத்தியசீலன் (ஓய்வுநிலை ஆசிரியர் - கமலாசனி வித்தியாலயம்), இராசேஸ்வரி (சரசாலை), காலஞ்சென்ற விஜயலக்சுமி ஆகியோரின் மைத்துனரும், கஜீபன், மயூரன் (லண்டன்), சங்கீதா (அவுஸ்ரேலியா), பிரசாந்தன், செந்தூரன் (லண்டன்), சரவணன் (லண்டன்) ஆகியோரின் பெரியதந்தையும், மேரி ஜக்ளின், ஶ்ரீகலா, மதன், சோமலக்கி,ஆஷா, அனு ஆகியோரின் மாமனும், சஞ்ஜேய் (சா / இந்துக் கல்லூரி), தேனுஷன், சந்தோஷ், அனுசன், அக்ஷயா, அபிநயா, துவாரகா, துஷாந், அபிஜித், ஆரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கமலாசினி வித்தியாலயத்திற்கு அருகில்**
**மட்டுவில் கிழக்கு,**
**மட்டுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 588 5825**
**077 607 0860**

(cr 42551) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு. கிளிநொச்சி நகர சமுர்த்தி வங்கியில் கடந்த புதன்கிழமை மரநடுகை நடைபெற்றது. கரைச்சிப் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். விடியல் ஆடைத் தொழிற்சாலையும் கரைச்சிப் பிரதேசசபையும் இணைந்து ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நடுகை செய்துள்ளன. (எ-25-13)





சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வனவளத் திணைக்களத்தினரால் மன்னார், மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் பல இடங்களில் மரங்கள் நடப்பட்டன. நிகழ்வில் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம், மாந்தைமேற்கு சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-25-213)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, சூழல் பாதுகாப்பு மற்றும் உயிர்ப் பல்வகைமையைப் பேணுதல் எனும் தொனிப்பொருளில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு நடைபவனி சண்டிலிப்பாயில் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக முன்றலில் ஆரம்பமான விழிப்புணர்வு நடைபவனி சீரணிச்சந்தி வரை நடத்தப்பட்டது. (எ-25-66)





வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் உலக சுற்றாடல் தின நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுவர், பெண்கள் விவகார அமைச்சின் அபிவிருத்தி உத்தி யோகத்தர் க.றெஜினோல்ட் கலந்துகொண்டார். (எ-25-13)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், யோகா தின நிகழ்வு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கொன்சியூலர் ஜெனரல் ஸ்ரீ சாய் முரளி, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் மஞ்சுளாதேவி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கிருஷ்ண குமார், துணைத் தூதர உத்தியோகத்தர்கள், பிரதேசசபை அலுவலக அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (எ-25-26)



அமரர் இராசதுரை ஜெயசிவானந்தனின் ஞாபகார்த்தமாக, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழையமாணவரும், தற்போது கனடாவில் வசிப்பவருமான இராசதுரை ஜெயமுகானந்தனின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட மைதானத்தின் நுழைவாயில், திருமதி இராசதுரை மருதனாச்சிப்பிள்ளை குடும்பத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-25)



# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 08 . 1937



மறைவு
07 . 06 . 2024

## விஸ்வலிங்கம் பாக்கியம்

அமரர் விஸ்வலிங்கம் பாக்கியம் (07.06.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானார் அன்னார். விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும் யோகலிங்கம், சந்திரமதி, உதயகுமார், தபோதினி, றமேஸ்குமார், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும். ராசபூபதி, நாகம்மா காலம் சென்றவர்களான செல்வராணி, அப்புத்துரை, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னராசா, அரியரட்ணம், சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அருந்ததி, சிவகுமார், கவிதா, விஜயேஸ்வரி, நகுலேஸ்வரன், கவிதா, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் வதனி, தயாறூபன்,லேனுசா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.06.2024) அன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக (சாவகச்சேரி) கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
மகன் : 076 319 4562
மகள் : 07[illegible] 636 6081

தகவல்: குடும்பத்தினர்.

(CS 42622) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரநடுகை நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜூன் 10
உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, மரநடுகையும் கடற்கரை சுத்தப்படுத்தலும் சுழிபுரம் மேற்கில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், குகன் குல சங்கத்தினருடன் இணைந்து, வலி.மேற்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், சுழிபுரம் கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் பசுமைப்புரட்சி திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடப்பட்டன.

நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், குகன் குல சங்கத்தினர், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-125)

# பேருந்து சேவை வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 10
முக்கொம்பன் மகா வித்தியாலயத்தை இலக்காகக் கொண்டு, முக்கொம்பன் கிராமத்துக்கான பேருந்து சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

600 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற முக்கொம்பன் கிராமத்தில் பேருந்து சேவைகள் இடம்பெறாதமையால் அங்கு வாழ்கின்ற மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். பூநகரி, அக்கராயன் மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளிகளும், முக்கொம்பனில் இருந்து அக்கராயன் மகா வித்தியா லயத்துக்குச் செல்லும் மாணவர்களும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். இந் நிலையில், பேருந்து சேவைகள் ஒழுங்காக நடத்தப்படாமல் இருப்பதையும், நிறுத்தப்பட்டிருப்பதையும், தெரிவித்து இரு வாரங்களுக்கு முன்னர் இந்தக்கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-13)

# சுழிபுரம் விக்ரோறியா எல்லேயில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 10
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான எல்லேப் போட்டியில் முதலாம் இடம்பெற்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி சம்பியனைத் தனதாக்கியுள்ளது.

இரண்டாம் இடத்தை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும் மூன்றாம் இடத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் நான்காம் இடத்தை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (ச-555-100)



அமரர் சுபாரத்தினம் கணநாத் மற்றும் அமரர் கயிலைநாதன் சுகர்ணன் ஆகியோரின் நினைவாக அவரது நண்பர்களால் குருதிக்கொடை முகாம் அண்மையில் நடத்தப்பட்டது. (ச)



ஓமந்தை, மருதோடைப் பதியில் அமர்ந்து, மக்களுக்கு அருள்பாலிக்கும் மருதோடை கந்தசுவாமி கோவில், போருக்குப் பின்னர் தற்போது புனராவர்த்தனம் செய்யப்பட்டு, மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. கும்பாபிஷேகத்தின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பல அடியார்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாகஇடம்பெற்றது. (ப-19)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் முத்தேர் பவனி கடந்த சனிக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இடம் பெற்றது. (எ-25-66)





யாழ். போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு நல்லூர்ப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (எ-25-66)

# குடும்பநல

## உத்தியோகத்தர் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்.மாவட்ட குடும்பநல உத்தியோகத்தர்கள் சங்கத்தினரால், சர்வதேச குடும்பநல உத்தியோகத்தர் தினம், கடந்த வாரம் வெகுவிமர்சையாக நடத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன, சிறப்பு விருந்தினராக அரச குடும்பநல உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவி திருமதி தேவிகா கொடித்துவக்கு, கௌரவ விருந்தினர்களாக பிராந்திய பதில் சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ரேமன்ஸ், தாய் சேய் நல மருத்துவ அதிகாரி மருத்துவர் இந்நுஜன், மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் நிபுணர் மருத்துவர் கஜேந்திரன், குடும்பநல உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-125)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ். வண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய திரிதள இராஜ கோபுர மஹாகும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.38 மணி முதல் முற்பகல் 11.26 மணி வரையுள்ள சுப வேளையில் அடியவர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (ச-66)

# கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

விற்பனைக்காக வைத்திருந்த 1000 க்கும் மேற்பட்ட போதைமாத்திரைகள், வாள்கள் என்பவற்றுடன் நான்கு சந்தேகநபர்கள் நேற்றுமாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குறித்த நால்வரையும் யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்து, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-26)

## '13'...

வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரபஞ்சம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தின் திறன் வகுப்பறைக்கான கணினி மற்றும் உபகரணங்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை கையளித்தார். இந்த நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இலங்கையில் உள்ள மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைக்காக பிரபஞ்சம் திட்டத்தின் ஊடாக இதுவரை 225 பாடசாலைகளுக்கு 251.4 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளோம் இது ஓர் அரச நிதியோ அல்லது அரச ஒதுக்கீடோ அல்ல. இதைவிட 87 பாடசாலைகளுக்கு 424.1 மில்லியன் ரூபா செலவில் பேருந்துகளை வழங்கி இருக்கின்றேன். இதைவிட 1083.1 மில்லியன் ரூபா செலவில் இலங்கை முழுவதும் மருத்துவ உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

நான் எதிர்க்கட்சியாக இருந்து இவ்வாறான சேவைகளை ஆற்றி வருகின்றேன் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து 76 வருடங்களாக செய்யாத வேலையை எந்த அரச நிதியும் இல்லாமல் செய்வதையிட்டு நான் மகிழ்வு அடைகின்றேன்.

சர்வதேச ரீதியாக ஒரு 'ஸ்மார்ட்' முறையிலான கல்வியை அறிமுகப்படுத்துவோம். 'ஸ்மார்ட்' நாட்டை உருவாக்கும் பொறுப்பு இந்த அன்பளிப்பின் ஊடாக உள்ளது.

இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்ற உறுதிமொழியை உங்களுக்கு நான் கொடுக்கின்றேன். சர்வதேச தொழிலாளர் தினத்திலும் நாங்கள் இந்த விடயத்தை அறிவித்திருந்தோம் எங்களுடைய நாட்டிலே சட்டரீதியான அரசியலமைப்பிலே பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் உள்வாங்கப்பட்டிருக்கின்றது.

எனவே வடக்கு, கிழக்கு, தெற்கு என்று ஒன்பது மாகாணங்களிலும் இதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கலேதும் இல்லை. அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக, சமய ரீதியாக, மக்கள் தங்களது உரிமைகளை பெற்றுக்கொள்ள எமது ஆட்சியில் எந்தத் தடையும் இருக்காது - என்றார். (அ-113)

## ரணிலுடன்...

'டீல்' இருப்பதாகவும், அந்தக்கட்சியினர் சிவப்பு யானைகள் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அந்தக்குற்றச்சாட்டை தேசிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

"எமக்கு மக்களுடன் மட்டுமே 'டீல்' உள்ளது. ஜனாதிபதியுடன் யாருக்கு 'டீல்' உள்ளது என்பது விரைவில் தெரியவரும்" எனவும் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது. (அ-ஓ-44)

## ரணிலின்...

[illegible]னும் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை [illegible]மல்லாது நாடாளுமன்றின் பதவிக்காலத்தையும் சேர்த்தே நீடிக்கவேண்டும் என அவர்கள் ரணிலுடன் பேரம் பேசியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்கும் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்வரும் ஜூலை மாதத்தின் தொடக்கத்தில் நடத்த அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகவும், இரு வருடங்களில் நாடு ஸ்திரமடைந்த பின்னரே தேர்தலை நடத்தலாம் என்பது இந்த அமைச்சர்களின் திட்டமாக உள்ளது. இந்தத் திட்டத்தில் உள்ள சட்டச் சிக்கல்கள் குறித்து, அதனை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பது குறித்தும் சிரேஷ்ட சட்டத்தரணிகளுடன் குறித்த அமைச்சர்கள் கடந்த சிலநாள்களாக தீவிர ஆலோசனையில் கொழும்பு பத்திரமுல்லையில் உள்ள தனியார் விடுதியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு கொண்டுவரப்படுமேயானால் அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தயார் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-இ)

## முடிசூடினார்...

மூன்றாவது முறையாகவும் நரேந்திர மோடி இந்தியப் பிரதமராக நேற்று மாலை 7.15 மணியளவில் பதவியேற்றார். புதுடில்லி ராஷ்டிரபதி பவனில் நடந்த இந்தப் பதவியேற்பு வைபவத்தில், பிரதமர் மோடியுடன் 30 அமைச்சர்களும் பதவியேற்றனர். (அ)

## நானே...

களின்போதே ஜனாதிபதி இதனைத் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்திய பின்னரே, தமது நிலைப்பாட்டை அறிவிக்க மொட்டுக் கட்சி திட்டமிட்டுள்ளது. (ஒ-44)

## 70....

ரஷ்யா சென்றுள்ள எதிர்க்கட்சிக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

"ரஷ்ய - உக்ரைன் போரில் ஈடுபட்ட இலங்கையின் முன்னாள் சிப்பாய்கள் 5 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் சுமார் 10 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கூலிப்படையில் சேர்ந்த 220 முன்னாள்படைவீரர்கள் மீண்டும் இலங்கை திரும்பும் நோக்கில் உள்ளனர். ஆயினும் கூலிப்படைகளில் இணைந்த சிறிலங்காவின் முன்னாள் படைவீரர்களான 70 பேர் பற்றி எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை" இவ்வாறு சுமார் ஒரு வாரமாக இந்தத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குறித்த குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-இ)

## மருத்துவமனைக்குள்...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

பருத்தித்துறை, மந்திகை ஆதார மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்தில் ஏழாம் இலக்க விடுதியில் ஒருவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். அவரை மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றவில்லை எனத் தெரிவித்து சிலர் மருத்துவமனைக்குள் புகுந்து தர்க்கத்தில் ஈடுபட்டனர். ஒருகட்டத்தில் அவர்கள் தாதியர் ஒருவர் மீதும் காவலாளி ஒருவர் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இது குறித்து பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஓ-100)

## தாலிக்கொடி....

என்பன அறுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விசாந்தவின் தலைமையில் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, கன்னாதிட்டி காளிகோவில் இந்து இளைஞர்களின் ஒத்துழைப்புடன் சந்தேகநபரான பெண்ணைக் கைது செய்து, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரித்தபோது அவரின் ஆடைக்குள் இருந்து தாலிக்கொடி, சங்கிலி, பென்ரன் என்பன மீட்கப்பட்டன.

கொழும்பு - வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த குறித்தபெண், வவுனியா - பூந்தோட்டத்தில் தற்பொழுது வசித்து வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைக்காக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் அந்தப் பெண் ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணையின் பின் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்படவுள்ளார். (அ-ஓ-26-66)

## முடிந்தது...

இந்தியாவில் மீன்பிடித் தடைக்காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது.

தடைக்காலம் நடைமுறையிலிருந்த 2 மாதங்களும் நாம் மகிழ்ச்சியுடன் இருந்தோம். தடைக்காலம் முடிந்த பின்னரும் இந்தியப் படகுகள் அத்துமீறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் - என யாழ். மாவட்டக் கடற்றொழில் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டு மாதங்களாக வடபகுதி கடற்றொழிலாளர்கள் மிகவும் சந்தோசமாகத் தொழில் மேற்கொள்ளக் கூடியதாகவிருந்தது.

எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தியாவில் மீன்பிடித் தடைக்காலம் முடிவடையவுள்ள நிலையில் இந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கைக்கு அத்துமீறி வராமல் இருக்க இரு நாட்டு அரசுகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தியப் பிரதமராக மோடி தெரிவானமைக்கு கடற்றொழிலாளர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர். இந்தியப் பிரதமர் இந்தியக் கடற்றொழிலாளர்களின் இழுவைமடிப் படகுகளைத் தடைசெய்யவேண்டும் - என்றார். (அ-ஓ-20)

## பட்டத்துக்குப்....

இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

'பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு றோட்டில், ஒரே ஒரு பரீட்சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது, படிப்புக்கும் போராட்டம் வேலைக்கும் போராட்டமா?, எல்லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்கவேண்டும், படித்தவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?, பல வருடக் கனவு வெறும் கனவாகவே போய்விடுமா?, படித்தும் பரதேசிகளாகத் திரிவதா?' என்பன போன்ற கோஷங்கள் எழுப்பி, அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலைவாய்ப்பை வழங்கவேண்டுமென வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எமது கோரிக்கைகளை அரசாங்கம் விரைந்து நிறைவேற்றவேண்டுமென்றும் இல்லையேல் தொடர்ந்து தாம் மிகப் பெரிய போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் பட்டதாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ-ஓ-20-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை அனுமதிக்கான வழிகாட்டல் அமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடமும் கல்வியியல்துறையும் இணைந்து நடத்தும், இலங்கை அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் பட்டப் பயில் நெறிகளுக்கான அனுமதிக்கான (கல்வியாண்டு 2022 அல்லது 2023) தொடர்பான இணையவழி இலவச வழிகாட்டல் அமர்வு இன்று திங்கட்கிழமை இரவு 7 மணி முதல் இரவு 9 மணி வரை இடம்பெறவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியல் துறைத் தலைவர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

Zoom ID: 912 3083 9506, Pass Code: Edu@1234 ஊடாக இணைந்து மாணவர்கள் பயன் பெற முடியுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ–66)


## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/55202) S-1

074 173 7684

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்

A-9 வீதி முகப்புடன் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

Golden Real Estate (pvt) Ltd Directer & Owner

077-029 4164
077-329 4130
077-294 1521

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வீடு வாடகைக்குண்டு.

076 184 2540 (CS55328)N-1

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

உபய கதிர்காமம், கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கில் 7 1/2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 005 1074, 077 695 6572


## 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 26.04.1947 — மறைவு 13.05.2024

கடந்த (13.05.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

### திரு. விஜயரட்ணம் கெங்காதரன்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (10.06.2024) காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (12.06.2024) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து ந.ப. 12.00 மணியளவில் நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டோர், மலர்வளையம் வைத்தோர் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

50/4, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி - கனகம்மா, பிள்ளைகள். 077 049 8084

(CS 55334) S-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 02.11.1938 — இறப்பு 08.06.2024

## மனோன்மணி நாகலிங்கம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி நாகலிங்கம் நேற்றுமுன்தினம் (08.06.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிமுத்து நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, திரவியம், சரஸ்வதி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கம்மா, அன்னம்மா, செல்லம்மா, காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் தர்மலிங்கம், காலஞ்சென்றவர்களான சண்முகம், நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜன் பாலா (பேரன்) 077 034 0154

கண்ணன் கார்த்திகேசு (பெறா மகன்) 077 378 5620

தகவல்: குடும்பத்தினர்

(Cs/55330 N-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.